ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1517/17 – 2007 ඔක්තෝබර් 03 වැනි බදාදා – 2007.10.03

1517/17 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி III – காணிகள்

காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : எல்ஏ/5/1/271.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ளஅரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், பாணந்துறை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 697, வடக்கு தல்பிடிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள களுத்துறை மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 3989 உடைய ஆரம்ப வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தெல்கஹவத்த அல்லது கெகுனுகஹவத்த எனும் பெயருடைய காணி :

துண்டு இல. 01

காணியின் பெயர் : தெல்கஹவத்த அல்லது கெகுனுகஹவத்த ; விபரம் : வீட்டுத் தோட்டம் வடிகால் (உலர்), நிரந்தரக் கட்டிடம் உண்டு, கிட்டத்தட்ட வயது 40 – 50 உடைய தென்னை மரங்கள் 5, வயது 20 உடைய புளிய மரமும் மாங்கள் மரமும் ருக்அத்தன மரமும் உள்ளன ; ஆரம்ப உரிமைகோருபவர் : எம். எஸ். எம். டி சில்வா, எச். ஆர். சில்வா, இல. 11, உயன்கலே, பாணந்துறை, குலதேவ வீரவர்தன, சிரி விஜயாநந்த மாவத்தை, இல. 17/9, பின்வத்த, பாணந்துறை, எஸ். லால் சில்வா, இல. 512/1, காலி வீதி, நல்லூர், பாணந்துறை, எஸ். சந்திர சிரி சில்வா, இல. 510, காலி வீதி, நல்லூர், பாணந்துறை, எஸ். குணபாலினி சில்வா, போகஹவத்த, தலல்ல, கன்தர,எஸ். லெஸ்லின் பத்ரவதீ சில்வா, இல. 124, சிசிர, பின்வத்த, பாணந்துறை ; விஸ்தீரணம் : 0.5080 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2007 ஆம் வருடம் திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு பாணந்துறை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2007 ஆம் வருடம் நவெம்பர் மாதம் 28 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பீ. எச். சீ. ரத்நாயக்க,
பிரதேச செயலாளர்,
பாணந்துறை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பாணந்துறை,
2007.10.01.

10 – 584